உ

கணபதி துணை.

# விநாயகமூர்த்தி ஒருபா ஒருப[torn]

# சரஸ்வதியம்மை

# நாற்பா மூவின மாலையும்

இவை

மதுரை ஜில்லா பெரியகுளந்தாலூகா,

எரசக்கநாயக்கனூர்ஜமீன் பூசா[torn]ண்டன்பட்டிக் கிராமம்

மகா-[torn]

**ச. திருமலைவேற் க[torn]கள் குமாரர்**

**சங்குக்கவி[torn]யரவர்களால்**

இயற்றப்பெற்று

ஷை பெரியகுளந்தாலூகா சின்னமனூரைச் சேர்ந்த

கருங்கட்டாங்குளம் கிராமம்

**மகா-௱-௱-ஸ்ரீ கூ. தலக்கூத்தேவரவர்கள் குமாரர்**

**மகராஜ முத்துவீரத்தேவரவர்கள்**

பொருளுதவியால்

மதுரை

மீனலோசனி அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றன.

1925

உ

கணபதி துணை.

# விநாயகமூர்த்தி ஒருபா ஒருபஃதும்
# சரஸ்வதியம்மை
# நாற்பா மூவின மாலையும்

இவை

மதுரை ஜில்லா பெரியகுளந்தாலூகா,

எறசக்கநாயக்கனூர்ஜமீன் பூசாரிக்கவண்டன்பட்டிக் கிராமம்

மகா-ள-ள-ஸ்ரீ

ச. திருமலைவேற் கவிராயரவர்கள் குமாரர்

**சங்குக்கவிராயரவர்களால்**

இயற்றப்பெற்று

ஷை பெரியகுளந்தாலூகா சின்னமனூரைச் சேர்ந்த

கருங்கட்டாங்குளம் கிராமம்

மகா-ள-ள-ஸ்ரீ கூ. தலக்குத்தேவரவர்கள் குமாரர்

**மகராஜ முத்துவீரத்தேவரவர்கள்**

பொருளுதவியால்

மதுரை

மீனலோசனி அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றன.

1925

உ

கணபதி துணை.

## இந்நூலியற்றிய சங்குக்கவிராயரவர்களின் பிதா ச. திருமலைவேற் கவிராயரவர்கள் இயற்றிய

# சிறப்புப்பாயிரம்.

---

### கலிப்பா.

மருமாது ளவமணிமான் மதித்தகட லமுதமெனப்
பெருமாது ரியக்கவிசெப் பிடும்வலுமை மிகப்படைத்தோன்
வருமாது லருக்கிரங்கு மனத்தினனம் புயமலர்ச்செந்
திருமாது குலவுமெட்டி சேரிநகர் தனிற்பிறந்தோன். (1)

மட்டவிழ்பூஞ் சோலைவளர் மலிபூசா ரிக்கவண்டன்
பட்டியென வியந்தெவரும் பகர்தருநன் னகர்வாழ்வோ
னிட்டமிகு மெனதுசுத னினியசங்குக் கவிஞனெனச்
சிட்டர்புகழ் மெனதருமைத் திருத்தந்தை பெயர்புனைந்தோன்.()

வனித்தவளத் தனத்துமையாண் மனக்கினிய புதல்வனெனச்
செனித்தவளக் கரியபுகழ் சிறந்தபரம் பொருளெனுமோர்
தனித்தவளப் பிறைக்கோட்டுத் தந்திமுகத் தெந்தையின்மே
லினித்தவளக் கரமுதமா மெனவொருபா வொருபஃதும். (3)

சினமாலை மதிநிகருந் திருநுதலார் தருங்கொடிய
கனமாலை யகற்றுபுதன் கழல்பணியும் பழவடியார்
மனமாலை யமதெனக்கொள் வாணிமிசை நாற்பாமு
வினமாலை யுங்கனிவா யியம்பினனன் பொடுமாதோ. (4)

அன்னபெருந் தமிழையவற் றமைந்துளநற் பொருணயமுஞ்
சொன்னயமு முணர்ந்தெவருந் தொல்லுலகத் தின்புறுவான்
பன்னுமெழின் மருவுமச்சிற் பதித்துமிக விளக்கினனுன்
மன்னுறுமுன் னதமலைமேல் வைத்தவிளக் கெனமாதோ. (5)

யாவனவ னெனில்விவரித் தறைகுவல்யா னறைகடல்சூழ்
பூவனவ ரதம்புகழ்சற் புருடசிகா மணியனையா
னாவனவ ராசத்தமிழ்மே லமைந்தவன்கைக் கொடையதனாற்
காவனவ னெழில்காட்டுங் கருங்காட்டாங் குளம்வாழ்வோன்.(

பூதலக்கு மிகவுநலம் புரிகருணைத் தாயெனுநன்
னீதலக்கு மிகுலாவு நிறைசவுபாக் கியனிதமுங்
காதலக்கு மர னிருபொற் கழலிடைவைத் தினிதிறைஞ்சு
மாதலக்கு மகிபதிமேன் மைத்தவத்தா லுற்பவித்தோன். (7)

இஞ்சுகந்த னையுமிகழுங் கிளரொளிச்செவ் விதழினர்க்கோர்
நெஞ்சுகந்த மதனெனவே நிகழ்த்தும்வடி வழகுடையான்
செஞ்சுகந்த மாலைமுடிச் செவ்வேந்தர் புகழ்சீர்த்தி
மிஞ்சுகந்த சாமியெனும் விவேகனரு மைத்தமையன். (8)

கருங்கலைநேர் கடினமனக் கயவர்தமைப் பாடியன்னார்
மருங்கலையா வணந்தமிழ்நா வலவரையா தரித்திடுவோ
னெருங்கலைவா ரிதிபுடைசூழ் நிலவலயம் புகழ்ந்துரைக்க
வருங்கலைகள் பலவுமென்பா லன்பாற்கற் றினிதுணர்ந்தோன்.)


தொக்கமக ராலயநீர் சுவறினுநற் குணமுடையார்
*பக்கமக லாவுளத்தான் பாடுமிசைச் சுரும்புசெறி
யக்கமக மெனக்கமழ்தா ரணிபுயபூ தரனருமை
மிக்கமக ராசமுத்து வீரமதி யூகியரோ. (10)

---

* பக்கம்—நட்பு.

உ

கணபதி துணை.



# விநாயக மூர்த்தி ஒருபா வொருபஃது.

## காப்பு.

வெண்பா.

மேதினியி னின்மீது வெண்பாக் கவித்துறையா
லோத வொருபா வொருபஃது—நீ துணைவா
தந்தா வளவ தனாலெனிடைச் சத்திமைந்த
தந்தா வளவ தனா.

ஒருபா தியின்வலவை யுற்றிடுமெய் யன்மீ
தொருபா வொருபஃ துரைக்க—வருவாய்வெண்
பூவம் மனையென்னாப் போந்துகுடி கொண்டவருண்
மேவம் மனையென்னா வில்.

## சற்குரு வணக்கம்.

அகவல்விருத்தம்.

திருமலைவேற் கவிராய தனங்கணிதழ் மாதர்புவி
செம்பொ னாசை
திருமலைவேற் கவிராய படர்மாய விருண்மூடுஞ்
சிந்தை யான்மு
திருமலைவேற் கவிராய வுரியபல நூலுணர்த்தித்
திருத்து மென்னை
திருமலைவேற் கவிராய சிங்கமிரு பதமலரென்
சிரம்வைப் பேனே.

# நூல்.

## வெண்பா.

காசினியின் மீதுனது காமர்மலர்த் தாடொழுது
நேசமுடன் வாழவரு ணீபுரிவாய்—தேசுமதி
கந்தமிகு கொன்றைமலர் கங்கைபுனை யுஞ்சடிலர்
மைந்தவொளிர் தந்திமுக வா. (1)

வானுட ருந்தொழுநின் வண்கழலிற் பாமாலை
நானுவி னுற்புனைய நல்குவாய்—தேனுரு
மைக்குழலு மைக்கொரு மைக்குமர மைக்கண்வல
வைக்கினிமை மிக்கதுணை வா. (2)

வாரணியு மாமுலையார் மையலிடை வீழ்ந்துகதி
சேரவழி யின்றித் தியங்குகின்றே—னோமிது
வந்தா தரிக்க மலைமடந்தை யீன்றருளு
மைந்தா கயமுகத்தே வா. (3)

வாராது மென்றுன் மனக்கவலை மாற்றியரு
டாராது நீயிருக்கிற் றாரணியிற்—சீராயான்
வாழ்வதெந்த வாறுதந்தி மாமுகங்கொள் சோதியென்றன்
றாழ்வொழிந்து போகவன்பு தா. (4)

தாதவிழு நீபமலர்த் தாரணியு மார்பன்மகிழ்
சோதரமெய் தேருமனத் தூயவர்க—ளாதரவாப்
போற்று மொருதந்தப் பொற்களிறே யென்றனையீ
டேற்ற வருவா யினி. (5)

இனியகவி பாடியித மில்லா வுலோபர்
மனையினித மோடிநான் வாடா—துனைநிதமும்
பத்தியிற்பூ சிக்கவருள் பாலிப்பா யத்திமுக
வித்தகவி நாயகத்தே வே. (6)

வேலாயு தன்குறமின் மீதுகொண்ட மாறணிப்பான்
மாலார் மதகளிறாய் வந்தவனு—கூலா
திருத்த முறுவெனது சிந்தைமா னீக்க
வருத்தியொடு வந்தருளை யா. (7)

யாதுமறி யாச்சிறியே னியானெனினும் போற்றினனிப்
போதுதயை செய்துமலர்ப் பூங்குழல்சேர்—மாதர்
விரகதவ னக்கடலுள் வீழுமெற்கா முக்கண்
மரகதவ னக்கொடிசெல் வா. (8)

வாயா லுனைத்தினமும் வாழ்த்துகிலே னெள்ளளவு
மீயா வுலுத்தர்தமை யேபுகழ்ந்திங்—கோயாப்
பெருங்கவலை யுள்ளேனெற் பேணுவாய் நூலின்
மருங்குடைய வல்லவைவா மா. (9)

மாதா வனையநீ வாதுசெயி னிங்கெனக்கோ
ராதாரம் வேறிலையை யாவுனது—பாதார
விந்தங் கொடுத்து விளையும் பவங்கெடுத்துக்
கந்தமத தந்திமுகா கா. (10)

முற்றிற்று.

---

கலித்துறை.

உள்வார் கனத்த தனத்தியர் மேல்வைத் துழலுமெனைக்
களவா கனத்த னருமை மருக கதிரயிலோ
னிளவா கனத்த னிவர்தொழும் பாத வெழிலுறுதுந்
துளவா கனத்த வினிக்காத் தருணற் சுகங்கொடுத்தே. (1)

சுகவம் பரம தனின்மூழ்க நன்கரு டேநற்றே
சிகவம் பரம ரையிற்புனை மாலு சிதமருகா
தகவம் பரம னையவிழி யம்பிகை தந்தகரி
முகவம் பரம விடர்க்கட லாழ்ந்திடு மூடனையே. (2)

மூடந்த கார மனமுடை யேற்குன் முளரிமலர்த்
தாடந்த கார மெனவவ னிக்குமு தன்மையவாழ்
பீடந்த கார கமாகக்கொள் ளாய்வெண் பிறைநிகரோர்
நீடந்த கார மியமுட னேயெனை நேயம்வைத்தே. (3)

நேயங் கரந்த மடமாதர் போக நிதமழுந்தி
நோயங் கரந்த மிலரா யுழல்விர்நுங் நோய்கெடற்கு
பாயங் கரந்தனின் மானமழு வேந்தும் பரமனருள்
சேயங் கரந்த ருதுவர்மெய் யன்பதஞ் சேர்வதுவே. (4)

சேரத் திருக்க ருணைபுரி வாயச் சிவனுமையா
ளோரத் திருக்க வருமுதன் மைந்த வுயர்ந்தபத
சாரத் திருக்க ரியதுதி செய்வித் தகவெனுள
மாரத் திருக்க வளவுந் தவிர்த்து னடிமலரே. (5)

அடிய ரவத்தி னலையா தருள்செயு மைங்கரவெண்
பொடிய ரவத்தி யுரித்தோரென் பார்தம் புதல்வதவிர்
கடிய ரவத்தி னதுநஞ் செனப்ப கருங்கொடிய
மிடிய ரவத்தி ரையம்பரம் போல்வரு வெந்துயரே. (6)

துயரங் கடக்க வகையறி யாதவென் றுன்மனமே
யயரங் கடக்க னதனமின் னார்மய லாவல்பணி
மெயரங் கடக்க முடியாக் கயமுக வீரற்கொறிண்
புயரங் கடக்க ரிவதனர் பாதமென் போதினையே. (7)

போதிலங் காத லுறுதேவும் போற்றிடப் பொற்களத
மீதிலங் காத வனைக்கட மாமுக வித்தகனைத்
தீதிலங் காத ரமுறச்செ லேழைநெஞ் சேதுதியா
மோதிலங் காத வருதுய ரெங்ங னொழிந்திடுமே. (8)

ஒழிய வருந்துதி செய்கண நாதனை யோதிடுமெண்
விழிய வருந்துதி ரைக்கட லுண்டவர் விண்ணவர்தே
மொழிய வருந்துதி கேள்வரின் னோர்பணி மூர்த்தியைநீ
கழிய வருந்துதி கன்னெஞ்ச மேதொடர் கவ்வையின்றே. (9)

கவ்வை யகத்த னினைப்போற் றினனம்பி கைமுலைப்பா
றுவ்வை யகத்த வியப்பொரு ளாயெங்குந் தோற்றமுறுஞ்
செவ்வை யகத்த திகழ்கண நாத திரைக்கடல்சூ
ழிவ்வை யகத்த டியற்புரப் பானை யினியுளமே. (10)

முற்றிற்று.

உ

சரஸ்வதி துணை.



# சரஸ்வதியம்மை நாற்பா மூவினமாலை.

காப்பு.

பூவிலுறை தேவினுயிர் போலுமெந்தாய் மேனாற்பா
மூவின மாலை மொழியவே—மேவுதுணை
மாதங்க வத்திரவ மான்மருக னேகதந்த
மாதங்க வத்திரவ மான்.

## நூல்.

குறள் வெண்பா.

சீரதிகஞ் சேர்கவிதை செப்பவரம் வேண்டினெஞ்சே
பாரதிகஞ் சத்துணைத்தாள் பற்று. (1)

இருகுற ணேரிசை வெண்பா.

துதியே புரிந்தேன் றுணைநீ வருவாய்
தநியே யெனைப்புரத் தற்குப்—பதியா
நிதமுங் கலைவலார் நெஞ்சுறை மின்னே
சதமுன் பதவன சம். (2)

ஆசிடை நேரிசை வெண்பா.

கலையாவுந் தேர்ந்திடினுங் காசினியி லியாரு
நிலையா முனதருளை நீங்கிற்—றலையாய
பேறுபெற லுண்டோ பிடியே மலர்க்கொடியே
தேறு புகழ்க்கலைமா தே. (3)

இன்னிசை வெண்பா.

பொன்னே புனமயிலே போத னுயிர்த்துணையா
மின்னே யகிலமிசை வெவ்வேறும் பல்லுயிர்க்கோ
ரன்னே யடியேன்மே லாமோவன் மம்புரப்பாய்
நன்னேயம் வைத்திந்த நாள். (4)

பஃறொடை வெண்பா.

பாங்கி னறம்பொருளின் பங்கதியென் றிந்நான்கு
மீங்குதவும் பான்மையது மெண்ணும் படிமுழுதுந்
தாங்குமுடி வேந்தர்மெச்சத் தக்கதுவு மிப்புவியி
னோங்குபுகழ் பெற்றிடற்கே யுற்றதுணை யாவதுவு
நீங்கரிய கல்வியன்றோ நின்னருள்பெற் றோர்க்கலது
தேங்கிடுமக் கல்விநலஞ் சேருஞ் செயலெளிதோ
கோங்கரும்பி னுங்கரும்பு கொம்மைமுலைப் பெண்மயிலே
மாங்குயிலே வேதனுக்கு வாய்த்தவுயிர்க் காதலியே
பூங்கமல வாதனத்திற் போந்த மடவனமே
தீங்ககல வெற்குனருள் செய். (5)

நேரிசைச் சிந்தியல் வெண்பா.

தவளமலர்ப் பூந்தவிசிற் றங்குமட மானே
பவளவிதழ்ச் செங்கனிவாய்ப் பாவாய்—கவியாவும்
பாடவரந் தந்தெணைக்கண் பார். (6)

இன்னிசைச் சிந்தியல் வெண்பா.

ஞான விளக்காவெஞ் ஞான்றுமென் கன்னெஞ்சத்
தானமமர்ந் தாலங்குச் சாருமிருள் பாறுமன்றோ
கானமரு வுந்தமிழ்நங் காய். (7)

குறள் வெண்செந்துறை.

பன்னு வலர்நாப் பயிலிசை மடந்தா
யென்னு மேவா தென்னிது காறுமே. (8)

குறட்டாழிசை.

வித்த கச்சதுர் வேத நீண்முடி மேலு மெண்கணன் றூலு மீதினு
நத்தி வாழ்வுறு முத்த மீயென் னுவில் வந்தருளே. (9)

வெண்டாழிசை.

மன்னர் சங்க மதிக்க வாழ்வார்
துன்னு சுகவாரி தோய்வார் கலைமகளே
நின்ன ருள்பெற் றோரிந் நிலத்து. (10)

ஒருபொருண்மேன் மூன்றடுக்கி வந்த
வெண்டாழிசை.

(1) வெண்கமலப் பூந்தவிசின் மின்னே தகவேகொ
லெண்கவிஞ ரெல்லார்க்கு மின்னருள்செய் திங்கெனக்கு
வண்கருணை நீபுரியா வாறு.

(2) ஆய்ந்தவுல கத்துயிர்க்கோ ரன்னே தகவேகொ
லேய்ந்ததமிழ் வாண ரெவர்க்குமருள் செய்தெனக்கு
வாய்ந்த வருள்புரியா வாறு.

(3) சொல்லின் படிவமுற்ற தோகாய் தகவேகொ
னல்லபுல வோரியார்க்கு நன்கருள்செய் திங்கெனக்கு
வல்லை யருள்புரியா வாறு. (11)

வெண்டுறை.

நனவரத முறுங்கவிதை நான்பாடித் துதிபுரிந்தே னுவின்மேவி
யனவரத முங்குடியி ருந்தருள்பு ரிந்திடுவா யன்னே வெண்மை
மனவரத னப்பணிபூண் மடமயிலே மானே
கனவரத கலையுணரக் கருணைசெயுந் தேவே. (12)

வெளி விருத்தம்.

மின்னு முடிவேந்தர் மெச்சவுயர் வாழ்வுறூஉங்
கால மென்றோ
பன்னு மதுரகவி பாடியான் சீர்பெறூஉங்
கால மென்றோ
கன்னன் மொழிக்கலைமான் கட்கருணை பெற்றிடூஉங்
கால மென்றோ. (13)

நேரிசை யாசிரியப்பா.

மண்ணக நிறைந்த மாந்தர்தம் வாயி
னண்ணிய வசனமு நல்குநின் னருளே

யென்னினின் கருணை யிற்சிறி தேனும்
பின்னையிவ் வுலகிற் பெருதா ரடையும்
பயன்வே றுளதோ பண்டைநாட் கவிஞர்
செயலெலா நின்னருட் செயலா லன்றே
படர்மா யப்பிர பஞ்சத் தானு
மடமா கியபுன் மதியி னானு
மன்னையா நின்னையா னயர்ந்துள னேனு
மென்னையப் பிழைபொறுத் தீடேற்றல் வேண்டும்
பூவயற் காவியைப் பொருவிழி நல்லாய்
பூவயற் காவியைப் போல்வருங் காதலீ
மேற்படி கம்புரை மேனிபெற் றேய்வரை
மேற்படி கம்போல் விழியருள் பொழிவோய்
திருக்கலை வேதந் தெரிவரும் பொருளே
திருக்கலை வேதந் தீர்த்தருண் மருந்தே
வனசவா தனத்து வாழ்வுறுந் திருவே
மனசவா தனத்து வைத்திடார் வாழ்வே
கருதா ரகவிருள் களையாச் சுடரே
யொருதா ரகமா யொளிர்மா மணியே
யிம்மையார் கடற்புவி யெவ் வுயிர்க்கு
மம்மையாய் வந்த வரும்பெற லணங்கே. (14)

இணைக்குற ளாசிரியப்பா.

அளப்பருந் துயர்க்கடல் கடப்பதற் குரிய
கலமென வுலகவர் விரும்புஞ்
சிலம்பொலி புலம்பு நலந்தரு நினது
சீதள வனச பாதமு
மடைக்கல மெனவந் தடைந்தோ ரியார்க்கு
மபயந் தருநின் னுபயசெங் காமும்
பத்தியிற் றுதிபுரி பழவடி யார்த
முள்ளமென் புலத்தி னுள்ளமென் புலக்கூழ்
வளரக் கருணை மழைபொழி
மாரியாஞ் சீர்பெறு

கயனிகர் நயனமு
மென்புகழ் துதிக்கு மியல்பின ரெவர்க்கு
மன்புறு மவர்த மகமுங் குணமுஞ்
செயலும் புகழுஞ் சோத்
தூய்தா யிவ்வணந் தோற்றுவிப் பேனென்
றேவருங் காண்மினென் றெடுத்துக் காட்டிய
வாறென வொளிருநின் பானிற மேனியுங்
கசடனு கியயான் கண்டுகண் களிப்பான்
றெரிசனங் கொடுத்துநின் சீரருள் புரிவாய்
பங்கய மனையே தங்குமம் மனையே
தவளமெய் வனமே வியமட வனமே
கூர்மையா மயிலே நேர்விழி மயிலே
மதுரிதப் பாவாய் முதுகலைப் பாவாய்
போதன தாவியே போல்வருந் தேவியே. (15)

நிலைமண்டில வாசிரியப்பா.

வம்புறு மின்கவிக் கம்பனென் போனும்
வெங்காள வசைசொல் லுங்காள மேகமும்
வட்டப் பூத்துதி யொட்டக் கூத்தனுங்
கரும்பன தீங்கவி தரும்புக ழேந்தியுஞ்
சீர்மேவு மாரியந் தேர்காளி தாசனும்
பண்டுளா ரிடையுயர் தண்டியா சிரியனு
மின்னும் புலமை மன்னுங் கவிஞர்
பலருஞ் சிறிதுன் சொலருங் கருணை
யின்றே லென்பய னன்றே பெறுவர்நின்
திருக்கறுங் கருணைப் பெருக்குறு மதனு
லன்றே பொருளுங் குன்று வாழ்வும்
பேரும் புகழுஞ் சீருந் தகவும்
பெற்றுநல் வாழ்க்கை யுற்றன ரீது
மெய்யென வுணர்ந்துந் தையனின் பதமலர்
துதியா தயர்ந்தே னிதுகா றுமந்தோ
வென்பிழை யாவு மன்பொறுத் தருளித்

தாட்டுணை தந்தெனை யாட்கொளல் வேண்டுந்
திடம்பெற மறைமுடி நடம்புரி மயிலே
யயனு வகமே பயின்மாங் குயிலே
நறைமலர் மனைவா யுறைமட வனமே
போற்றடி யாருளத் தேற்றிய விளக்கே
புலமை முதியோர் குலதெய் வதமே
பொன்னே யருங்கலை மின்னே யன்னே
சாந்தமார் பரமவே தாந்தநா யகியே. (16)

அடிமறி மண்டில வாசிரியப்பா.

மாரதி மடவார் மயல்வினை யுளனே
சாரதி யென்பவர்ச் சார்ந்தறி கிலனே
சீரதி கம்பெறுஞ் செயல்புரி கிலனே
பாரதி நின்னருள் பாலிப் பாயே. (17)

ஆசிரியத் தாழிசை.

சொற்கிழத்தி கட்கருணை தோய்ந்தனையேற் றேய்ந்திளமை
பிற்கிழத்தி றன்பிணியும் பெற்றுலு மெய்யுணர்வ
தற்கிழத்தி யோநெஞ்சே சார்வா யவள்பதமே. (18)

ஒரு பொருண்மேன் மூன்றடுக்கி வந்த
ஆசிரியத்தாழிசை.

(1) நேயப் பழவடியார் நெஞ்சக் கமலம்வளர்
காயத் திரிபாத கஞ்சம் பணிந்திடுவாய்
மாயத் துயர்நீங்கி வாழ்வான் மடநெஞ்சே.

(2) கானச் சுருதிமுடிக் கட்பயின்ற வித்தகமெய்ஞ்
ஞானப் பிராமிபத நாட்கமலம் போற்றிடுவாய்
மானப் படர்தீர்ந்து வாழ்வான் மடநெஞ்சே.

(3) சீர்த்திதரு முத்தமிழிற் சேர்ந்துள் ளுறைஞான
மூர்த்திசர ணம்புயத்தை முன்னி வணங்கிடுவாய்
வாய்த்திடுதுன் பந்தவிர்ந்து வாழ்வான் மடநெஞ்சே. (19)

ஆசிரியத்துறை.

கலைதரூஉம் பொற்கொடீ நின்பாதம் போற்றுமெனைக் காவாயென்னி
னலைபொருஉங் கடல்சூழு மவனிமிசைத் தெய்வமென யாவர்சொல்
நிலைபெறாஉ நின்மகிமை யென்னுகு மன்னே யென் [வர்
றலையுறாஉம் படிநினது சரணமலர் வைத்தெனையா தரிப்பாய்நீயே.()

இடைமடக்காய்வந்த ஆசிரியத்துறை.

நிறைந்த பலவுயிர்க்கு நீயொருதா யன்றோ
யறைந்த துதிசெயென்னை யாள்கிலா வாறென்னே
யறைந்த துதிசெயென்னை யாள்கி லாயேற்
குறைந்த துனதுபுகழ் கூறும்வசை யிவ்வுலகே. (21)

ஆசிரியவிருத்தம்.

பாவியற்ற மிழ்முதலா மூத்தமிழுந் தேர்ந்தறியேன்
பழிக்கத் தக்க
பாவியற்ற மிகுமனத்தே னென்னையுநின் பத்தருளோர்
பத்த னுகப்
பாவியற்ற மிதுவெனைக்காப் பதற்குனது பதமலரைப்
பணிந்தேன் செய்ய
பாவியற்ற வரங்கொடுத்தெற் பாலிப்பாய் பாரதியே
பனுவன் மின்னே. (22)

நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா.

தரவு.

சோதிமிகும் பொன்னைத் துலங்கு நவமணியைச்
சீதளவெண் கோகனதஞ் சேர்திருவை வேதமுடி
மீதிலகும் பொற்கொடியை விரிஞ்சனுயிர்க் காதலியைக்
கோதில்பல பாப்புனைந்து கொண்டாடாய் நெஞ்சமே.

தாழிசை.

பல்லுயிர்க்கு மொருதாயாம் பாமடந்தை பதம்போற்ற
லில்லையெனி னந்தோவிங் கேவர்துணை யாவாரே

மாண்டகுணஞ் சேருலக மாதாவை நீதுதித்து
வேண்டலையென் றுலுனக்கு வேறுதுணை யாருளரே
நீங்கரிய நான்மறைமே னிர்த்தனஞ்செய் யுத்தமியை
யோங்குதுதி செய்யாயே லுற்றதுணை மற்றெவரே

தனிச்சொல்.

ஆதலினல்

சுரிதகம்.

நித்திய மன்னவள் பொற்பத பங்கயம்
பத்தியிற் றுதித்துப் பன்மலர் தூவி
வந்தனை புரிந்து வணங்கிடு வாயேல்
வெந்துயர்ப் பவமு மேல்வரு சனனமு
மகலப் பெருவாழ் வடைந்து
சுகவா ரிதியிற் றோய்ந்திடு வாயே. (23)

அம்போதரங்க வொத்தாழிசைக்கலிப்பா.

தரவு.

காசினியில் வாழுங் கணக்கிறந்த பல்லுயிரா
யாசகலு மவ்வுயிர்வா யானிகழ்த்தும் வாசகமாய்த்
தேசுலவும் பண்ணுய்ச் செழுமறையாய்ப் பல்கலையாய்ப்
பாசபவ நாசமுறப் பண்ணுஞ் சுடரொளியாய்
வீசுமரு வெண்பதும மீதும்வளர் காரிகைநின்
மாசில்புகழ் பேசுதற்கும் வல்லேனே வல்லேனே.

தாழிசை.

பூவுலக முன்படைத்த போதனுநன் காதரவா
நாவிலுனை முந்திருத்தி நான்மறையுந் தேர்ந்தனனேற்
றேவிலுயர் மாமகிமைத் தெய்வமெனும் பூங்கொடியே
யாவலுற நின்பெருமை யார்புகல வல்லுநரே.

எத்தனைசெல் வப்பெருமை யெய்தி யிருந்திடினுஞ்
சுத்தமுற நின்னருளாற் சொல்வசனந் தெரியானை
பித்தனிவ னென்றேசும் பேருலக மென்னின்மின்னே
யத்தகைய நின்பெருமை யார்புகல வல்லுநரே.

மன்னுஞ் சுடர்வயிர மாமணியா வுந்துளைத்துத்
தன்னைத் துளைசெயற்குந் தான்கருவி யாவதுபோ
னின்னைத் துதிசெயற்கு நின்கருணை வேண்டுமெனி
னன்னையுயர் நின்பெருமை யார்புகல வல்லுநரே.

அம்போதரங்கம்.

திகழ்கலையும் பல்கலனுஞ் சேர்மனையும் வெண்மையென்றுற்
புகழ்புனைந்த வாறன்றோ பொற்புறுநின் றிருவடிவே
மேயவிடை சேர்துகிலு மின்பணியும் வெண்மை யென்றுற்
றூயவணீ யென்றெவருஞ் சொற்றிடவும் வேண்டாவே.

புத்தக மேந்தும் புதியசெங் கரத்தாய்
வித்தக ஞான மிகத்தரும் வரத்தாய்
சுத்தசை தன்ய சொரூபநன் னயத்தாய்
பத்தர்கட் கருள்புரி பாதவம் புயத்தா

யாரண முடிமே னடித்தனை
யாகம முழுதும் படித்தனை
காரண மிதுவென முடித்தனை
காமரு முத்தமிழ் வடித்தனை

பூவுயிர் படைத்தனை
தீவினை துடைத்தனை
பாவலர்ப் புரந்தனை
மேவலர்க் கரந்தனை

பலகவி பயின்றாய்
கலைமுழு தயின்றாய்
யிருவினை யொழிந்தா
யருண்மழை பொழிந்தா

தனிச்சொல்.

யித்துணைகொல்

சுரிதகம்.

இன்னும் பலவே மன்னும் பெருமை
துன்னுங் கடற்புவித் தோற்றமி யாவு
நின்னரு ளன்றோ நீடனந் தன்போ
லாயிர நாவிருந் தாலுந்
தூயநின் பெரும்புகழ் சொலற்கடங் காதே. (24)

வண்ணக வொத்தாழிசைக் கலிப்பா.

தரவு.

ஒழியா வலைக்கடற்பா ருற்றமட மாந்தருக்கு
விழியாத் திகழ்பொருளும் வேண்டுவன வின்பமெலாங்
கொழியாத் தரும்பொருளுங் கோதுபடா தெஞ்ஞான்று
மழியாப் பொருளு மரசர்மதிக் கும்பொருளும்
பழியாப் பொருளும் பரம்பொருள்காட் டும்பொருளுங்
கழியாப் பொருளுமுயர் கல்வியெனும் பொருளன்றே.

தாழிசை.

சுணங்காருங் கொங்கையெழிற் சுரருலக மடமகளிர்
கணங்காத லுடனிதமுங் கதியடையத் துதிபுரியு
மணங்காகும் பாமடந்தை யஞ்சரண பங்கயத்தை
வணங்காதா ரக்கல்வி மாண்பொருளைக் காண்குவரோ.

தணியாக் கொடுந்துயர சாகரத்தி லாழ்ந்துமனந்
துணியா தயர்வுறுவார் சுகவேலை சார்ந்திடுவா
னணியாகப் பற்று மருங்கலமாம் பாரதிதாள்
பணியாதா ரக்கல்விப் பயன்சிறிதுங் காண்குவரோ.

தோற்றாத மெய்ப்பொருளுந் தோற்றுவிக்கும் பேரொளியாய்
மாற்றாத பேரன்பு வாய்ந்தமனக் கோயிலிடைக்
கூற்றார் கலையுருவங் கொண்டுறையு மங்கைபதம்
போற்றாதா ரக்கல்விப் பொருள்சிறிதுங் காண்குவரோ.

வண்ணகம்.

நடமிசை யியலென வடைவுறு திரிவித
　　தமிழ்முழு வதுமுணர்வதும்
புடவியை யரசுசெய் மணிமுடி யவர்சம
　　மெனவவ ரருகுறைவதுங்
கடலமு தினைசொல வுயர்சுவை பெறுமது
　　ரிதகவி மழைபொழிவதுந்
திடநிறை மனவறி வுடையவ ரிவரென
　　வுலகவர் துதிபுரிவதும்

அம்போதரங்கம்.

இருநான்கு திசைபுகழ வேற்றமுற வாழ்வதுவு
மொருநான்கு மறைவடிவா மொண்ணுதன்மெய் யருட்செயலே

கண்ணிரண்டா மெண்ணெழுத்தும் கற்றிடலும் பெரும்பேரு
மெண்ணிரண்டும் பெற்றிடலு மிசைமடந்தை யருட்செயலே

அயனுலகம் படைப்பதுவு மன்னையவ டிருவருளே,
சகலவுயிர் தழைப்பதுவுந் தன்னிகரில் லவளருளே
வாசகங்கள் பேசுவதும் வண்கலைமின் றண்ணருளே
நல்லறிவு மல்குவது நங்கையவள் பேரருளே

பல்லுயிர்க்கு மொருதாயாம் பான்மையள்
சொல்லுதற்கு மரிதாய மேன்மையள்
கலையரங்க நடஞ்செய்யுங் கருத்துடையாள்
சிலையனைய மனப்பதகர் கருத்துடையாள்
பொற்படிகம் போலுநிறப் பூங்கொடியா
டற்பணியா தார்வெவ்வினை யாங்கொடியாள்
வாணர்கவி புகலவவர் வாக்குறைவாள்
பேணுமண்பெண் பொன்னுமவ வாக்குறைவாள்

பத்தருட் சுகவாரி
பரவியவன் பகாரி
வித்தகபுத் தகபாணி
வினைக்கடலுக் கொருதோணி
தொண்டருளத் தொளிர்சோதி
தொல்பொருட்கெல் லாமாதி
மலர்மனைவாழ் மடவன்னம்
வளங்குறையா நிறைசொன்னம்

நான்முகனுக் கொருதேவி
நன்ஞான நிறைவாவி
யுளப்புலக்க ணொளிர்வித்து
விளக்கியதெய் வத்துண்முத்து
புன்பிறவிக் கருமருந்து
புலவருளம் வருவிருந்து
பாசாட விக்கொரழல்
பண்பறிஞர்க் கினியநிழல்

தனிச்சொல்.

ஆ ம வ ே ள

சுரிதகம்.

ஆதலா லக்கலை மாதிரு பாதப்
போதுநும் மிருதயம் பொருந்தப் பதித்து
நித்தியம் பணிந்து நிற்பீர் புலவீர்
சத்திய மாயித் தாரணி மீது

மன்னரு மதிக்கும் வகைவாழ் வடைந்து
துன்னரும் பிறவித் துயர்க்கட னீந்தி
யிருவினை யொழிந்துபே ரின்பந்
தருமேற் கதியிற் சார்ந்திடு வீரே. (25)

வெண்கலிப்பா.

ஆதார நின்னையன்றி யாருளரித் தாரணியிற்
பாதார விந்தமலர் பன்முறையு மியான்பணிந்தேன்
பாவலர்க்கு வாய்த்திடுங்கற் பகதருவே யிகபரத்து
மேவுசுக மளிக்கவல்ல மின்கொடியே பவவினைக
டைய்க்குமொரு வெவ்வடவைச் செந்தீயே யெந்தாயே
வாக்கிலிருந் தின்னருள்செய் வாய். (26)

தரவு கொச்சகக் கலிப்பா.

கடலுலகின் புடைநினது கருணைமழை பொழிவதனு
லுடன்மருவு பலவகையா முயிர்ப்பயிர்கள் செழிக்குமெனத்
திடமுறுபல் கலைமறையுந் தெளிவுறநன் கியம்பிடவு
மடமையுள முடைமையினின் மலர்ப்பாத மறந்தனனே

தனிச்சொல்.

இப்பிழையாற்

சுரிதகம்.

கசடனு கியவெனைக் கைவிட றகாதுநின்
வசமென தகமுற மன்னருள் சுரந்து
நன்னெறி சேர நன்மதி யளித்து
நின்னிரு பாத நீழல்சேர்த் தருள்வாய்
சலசமென் மலர்ப்பூந் தவிசிற்
குலவிவீற் றிருக்குங் கொடியிடை யனமே. (27)

தரவிணைக் கொச்சகக் கலிப்பா.

தரவு.

பண்டைநாட் கவிப்புலவர் பாவிருந்தின் னருள்சுரந்து
கண்டவதி சயங்களெல்லாங் கவிபாடும் படிபுரிந்து
வண்டமிழார் கலையணங்கே வரிசைபெறப் புரந்தனையே.

தனிச்சொல்.

இ ங் நா ட் க ண்

தரவு.

மன்னுபல புலவருக்கும் வாக்கருளிக் காக்கவந்தா
யென்னையுமவ் வாறுபுரந் திலையென்னோ பல்லுயிர்க்கு
மன்னையெனின் பெருந்தகைமைக் கழகிதுவோ வழகலவே

தனிச்சொல்.

மற்றும்

சு ரி த க ம்.

பலமக வுடைய குலன்வரு நற்று
யலமுறப் பலரை யாதரித் தெடுத்து
வளர்த்துச் சிலரை மாழ்குற விடுத்த
லுலகியல் பலவே யுனைநான்
பலமுறை பணிந்தேன் பாதுகாத் தருளே. (28)

சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா.

த ர வு.

பூவகத்துச் சராசரமாம் பொருள்படைக்கு மறையவனன்
னுவகத்துஞ் சததளமென் னறைகமழ்வெண் பதுமமலர்த்
தூவகத்துந் திருத்தொண்டர் சுருதிபயின் மெய்யுணர்வு
மேவகத்து நாவகத்தும் வீற்றிருக்கும் பூங்கொடியே

தா ழி சை.

மாசுகவி யாகினது வண்கருணை பெற்றோர்க்கே
யாசுகவி பாடவரு மற்றோர்க் கெளிதேயோ

சதுரகவி ருப்புறநின் றண்ணருளை நண்ணினர்க்கே
மதுரகவி பகரவரு மற்றெவர்க்கு மெளிதேயோ

பிறைக்கவினூர் நன்னுதனின் பேரருளிற் றிளைத்தோர்க்கே
மிறைக்கவியு முரைக்கவரு மேவார்க் கெளிதேயோ

அத்தார கவிரையெனு மன்னேநின் னடியார்க்கே
வித்தார கவிபுகலும் விதமுறுமற் றவர்க்கெளிதோ

தனிச்சொல்.

ஆங்கரிதே

சுரிதகம்.

ஆதலி னின்னிரு பாததா மரையைக்
காதலுற் றனுதினங் கனவினு நனவினு
மறவா தடியேன் வணங்கின னினியின்
புறவா தரித்துப் புனிதநற் கலைபல
தேர்வுறும் வரமுந் திகழுமைம் பாவு
மூவின நாற்கவி முறைபகர் வரமும்
புகழ்பெற வளித்தருள் புரிந்து
மகிதலத் தெனையாள் வதுநின் கடனே. (29)

பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா.

தரவு.

மருக்காலுந் தவளநிற வனசமலர் மனையணங்கே
யிருக்காலுந் தொடர்வரிய விசைமடந்தா யெந்தாயே
யொருக்காலுந் துதிபுரியா துனைமறந்தே னிதுகாறுந்
திருக்காலுஞ் சிந்தையனியான் செய்யும்வகை யறிகிலனே

தாழிசை.

தேவரம்பை யருந்துதிசெய் தேவிநினைப் போற்றுமே
மாவரம்பை யிகந்ததுயர் வாரியிடை மூழ்கினனே

நான்முகனு விற்பயிலு நாயகிநிற் றுதியாமே
மேன்முகமன் கூறிடுவி வேகமிலே னாகினனே

மெய்ஞ்ஞானந் தோற்றுவிக்கும் விமலைநினை வாழ்த்தாமே
யஞ்ஞானங் கொண்டிங் கலைந்தே னலைந்தேனே

அனத்துவச னுயிர்த்துணையா மம்மைநிற் பணியாமே
மனத்துவச மிடர்சேர மல்கறிவு மல்கினனே

நலம்பாடு மேவுகலை நங்கைநினை வணங்காமே
யிலம்பாடு சேர்கவலை யெய்தி யிருந்தனனே

பூவேந்த நின்றவெழிற் பூவைநினை யிறைஞ்சாமே
பாவேந்த னென்றபுகழ்ப் பாடிலனுய் வாடினனே

தனிச்சொல்.

யிங்கெனை நீ

சுரிதகம்.

யிவ்வண மறுகி யேங்குற விடுத்தல்
செவ்விதன் றுனது சீர்மகி மைக்கே
யின்னே வந்தெனை யெடுத்தாட் கொண்டு
நன்னே யம்பெற நாளு
மன்னே யினியநின் னருள்புரி குவையே (30)

மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா.

தரவு.

முத்திக்கு நேரா மொழிநகைசேர் கலைமகளே
முத்திக்கு வித்தே முதுபொருளே துதிபலவோ
தித்திக்கு முழுவதூஉந் தியானிக்குந் தேவதையே
தித்திக்கு மானந்தத் தேனேநிற் பணிந்தேனே

கள்ளமுத லியகுணநீங் கத்தொண்டர்க் குயர்ஞான
முள்ளமுத யஞ்செயச்செ யொண்டொடியே தெவிட்டாத
தெள்ளமுத மேயிடும்பைத் திரைப்படிந்தார்க் கிருபாத
வள்ளமுத வுங்கருணை மானேநிற் பணிந்தேனே

தாழிசை.

பன்னாளுந் துதிபுரிந்து பணிந்திடுநின் னடியேனை
மன்னாளுந் தயவிலையேல் வசையுறுநல் லிசையறுமே

துத்தியநா ளும்புரியுந் தொண்டனெனை யாண்டிலையேன்
முத்தியளித் தருண்ஞான மூர்த்தியிது சீர்த்தியன்றே

போதமளித் தருமகுணப் பூவைநினைப் பணியுமெற்குப்
போதமளித் தருள்கிலையேற் பூவலமே கேவலமே.

பொன்னாமஞ் சரண்பணியெற் புரந்திலையேற் சிறந்தெவரு
நின்னாமந் துதிபுரிந்து நிற்கலரே நிற்கலரே

பம்புவியா குலமுடைய பத்தனெனைப் புரந்திலையே
லம்புவியா ரலகிலுயிர்க் கவ்வையன்றே கவ்வையன்றே

தனிச்சொல்.

எஞ்ஞான்றும்

அராகம்.

பலதர நினைமுறை பணிவது முயர்துதி புரிவது
மினமறி கிலையோ
விலகிய புடவியின் வளர்வன சகலந லுயிர்களை
யருளானை யலையோ
வலசின தொருதிரு வருள்பல வுயிர்களின் மருவுமெ
னளவிலஃ திலையோ
வலமா லுறுமன வசடனை யொருவழி யருள்செய
வருவது தொலையோ

தனிச்சொல்.

இத்ததி நீ

தாழிசை.

கட்டுணையி னுட்கருணை களிப்பாயெற் களிப்பாயே
லெட்டுணையு முளக்கவலை யீங்குறுமே நீங்குறுமே

அக்கவலை யருள்சிறிதிவ் வாதனெனக் கீதலுண்டே
லக்கவலை யிவ்வாறிங் ககன்றிடுமே யகன்றிடுமே

கலையாக மந்தருநின் கண்ணருள்சற் றண்ணியதே
னிலையாகக் கொடுந்துயர நின்றிடுமே பொன்றிடுமே

மேதகமுந் துறுநினது மெய்க்கருணை பெற்றனனேற்
பாதகமுந் துயருமெனைப் பற்றிடுமே யற்றிடுமே

மன்பதையா மென்பயிர்க்கோர் மாரிநிகர் சீர்க்கருணை
யென்பதையெற் களிக்கிலிவ்வா றேங்குவனே யோங்குவனே

அம்போதரங்கம்.

நின்னருளும் பெற்றனனே னீண்டதிரைக் கடற்புவியின்
மன்னருளும் பேரேற வாழ்க்கைமிகப் பெறுவேனே

கலைமுழுது மனமகிழக் கற்பே
னிலைமையுற வறவழியி னிற்பேன்

புவிமாதர் பொருளாசை நினையேன்
கவிமாக சடர்மீது புனையேன்

சித்தமிகத் தேறுவலியா
னித்துயர மாறுவலியான்
சுத்தகுணஞ் சேருவலியான்
பத்தர்குழாஞ் சாருவலியா
னிகமாயை கடிவேனியான்
சுகவாரி படிவேனியான்
பரமபத நாடுவனியான்
சரணமலர் சூடுவனியான்

தனிச்சொல்.

ஆ ங் க த ஞ ற்

சுரிதகம்.

கனிவுறு நின்பெருங் கருணையெற் கருளி
யனுதினம் பரிவுட னுதரித் தினிநீ
கசடனு கியவெனைக் காப்பாய்
திசைதிசை தோறுநின் சீர்பரந் திடவே. (31)

ஒரு பொருண்மேன்மூன்றடுக்கிவந்த
கலித்தாழிசை.

சாதுரிய மேதையர்க்கோர் தாயனைய தூயவளை
மாதுரியக் கவிபகரும் வரம்வேண்டின் வாழ்த்தீர் புலவீர்காள்

வெண்மருவம் புயமனையின் மேவியவெள் ளோதிமத்தைப்
பண்மருவம் பாகிகழ்த்தும் வரம்வேண்டிற் பணிவீர் புலவீர்காள்

முத்தமுதல் வெண்பணிபூண் மூர்த்தமுறுஞ் சீர்த்திருவைப்
புத்தமுதக் கவிபகரும் வரம்வேண்டிற் போற்றீர் புலவீர்காள்.

கலித்தாழிசை.

சாத்திரமொன் றுந்தெரியேன் சற்குணம்வாய்ந் துளனல்லேன்
ரோத்திரஞ்செய் தனனினது துணைச்சரண பங்கயத்தை
மாத்திரநன் கவ்வாற்றுன் மகிழ்ந்துனது திருவருட்கே
பாத்திரவா னுக்கியெனைப் பாலிப்பாய் பாரதியாந் தாயே. (33)

கலித்துறை.

வாவும் பரியென வன்னங் கொண்டவன் மறைநாவு
மேவுங் கலைபல கற்றவர் நெஞ்சமு மிளிர்நாவுந்
தூவுந் துளிமது வெண்மல ரும்பயி ரேகாயென்
ஞவுங் குடிகொள வாவென தாமத நவில்வாயே. (34)

கலிவிருத்தம்.

தண்ணருள் சிறிதுநீ தருத லின்றெனின்
மண்ணினின் னடியனேன் வாழு மாறுண்டோ
பண்ணமை மறைமுடி பயிலு மன்னமே
வெண்ணிற மரைமலர் மேவுந் தையலே. (35)

குறளடி வஞ்சிப்பா.

தெண்டிரையுடை கொண்டிடுபுவி
யிடையுயருமா னிடஜெனனமாய்ப்
பிறந்துஞ்சிறி தறம்புரிதர
நினையாமட மனமாந்தரைத்
தருமாதிரு மருமாவெழிற்
காமாபொரு வீமாகொடைக்
கன்னுதரை மன்னுசிலை
விசையாவென விசையாவிதம்
போற்றிக்கவி சாற்றித்திரி
யடியேனைநின் னடிமாமலர்
துதிசெயநல மதியருளியிந்
நாட்கடிதினி னுட்கொண்டருள்
புரிவாய்மிக விரிவாகிய
தமிழ்தேர்பவ ரமிழ்தேமறை
முடிவேகலை வடிவேயயன்
மனையேமலர் மனையேவள
ரனமேதிகழ் சொனமேமலர்க்
கொடியேமடப் பிடியேசெழுந்
தேனேகலை மானேபுகழ்

தனிச்சொல்.

சிறந்த

சுரிதகம்.

மூவகைத் தமிழெனு மொழிவனந்
தாவியென் ஞான் றுநிர்த் தனம்புரி மயிலே. (36)

சிந்தடி வஞ்சிப்பா.

கடிமலர்மனை வயின்வதிதரு கலைமடவரல்
படிமுழுவது நிறைபலவுயிர் பயந்தருளனை
மாவற்புத வேதற்குயிர் வாழ்க்கைத்துணை
பாவிற்பயில் வாணர்க்கருள் பரதேவதை
நிறைஞானமு மருண்மோனமுந் தருமோர்குரு
வறைவான்புக ழுருவாந்திரு வெனுமெல்லியல்

தனிச்சொல்.

பதமலர்

சுரிதகம்.

நித்தியம் பணிந்துநி னெஞ்சே
சத்திய மவளரு டருவது நமக்கே. (37)

வஞ்சித்தாழிசை.

தூயமறை மேயகலை நாயகிநின் னருள்வாய்க்கிற்
றேயமுறை யரசர்மெச்சப் பாயபுகழ் பெறுவலன்றே

இன்னமுத நிகர்பனுவ லன்னைநின தருள்வாய்க்கிற்
சொன்னமுடி வேந்தர்மெச்ச மன்னுபுகழ் பெறுவலன்றே

பாங்குபெறு வாக்கருளும் பூங்கொடிநின் னருள்வாய்க்கிற்
றூங்குமுடி வேந்தர்மெச்ச வோங்குபுகழ் பெறுவலன்றே. (38)

வஞ்சித்துறை.

அருணலத்தை யவாவினன்
கருணைவைத்தெனைக் காத்திடத்
தருணமிங்கிது தவளமெய்
வருணமுற்றொளிர் மங்கையே. (39)

வஞ்சி விருத்தம்.

வாவிருந் தகமனை வந்தெனன்
னுவிருந் தருண்மிக நல்கிடம்
மாவிருந் தனிச்சதுர் மறையவன்
றாவிருந் தமெனுமென் றேகையே. (40)

---

முற்றிற்று.

இஃது

பெரியகுளந்தாலூகா சின்னமனூரைச் சேர்ந்த
கருங்கட்டாங்குள நகரின்கண் வசிக்கும் மகா-௱-௱-ஸ்ரீ
கூ. தலக்குத் தேவரவர்கள் குமாரர்

**மகாராச முத்துவீரத் தேவரவர்கள் மீது**
**ஷை சங்குக்கவிராயரவர்கள் இயற்றியது.**

தாக்களச்சிற் றறிவோர்பாற் சாராநன் மதியுடைவித்
தாரன் வாசப்
பூக்களச்சிற் றிகழ்கூந்த லார்மதனன் மகராச
பூமா னீல
மாக்களச்சிற் பரன்மகவாங் கணநாதர் மீதுகலை
மகண்மீதி யான்சொல்
பாக்களச்சிற் பதித்துமிக விளக்கினன்சீர் வியனுலகம்
பரவத் தானே.

---



# மீனலோசனி அச்சியந்திரசாலை,

## தெற்குக் கோபுரவாசல்,

தொட்டியன் கிணற்றுத்தெரு,

மதுரை.

---

**அச்சு வேலைகளும், பயிண்டு வேலைகளும்.**

தமிழிலும், இங்கிலீஷிலும், பலவித மைகளாலும், கிலிட்டுகளாலும்,
திருமணப்பத்திரிகைகள், பட்டா, முச்சலிக்கா, ரசீது, உண்டியல்,
வக்காலத்து முதலிய கோர்ட்டுச் சம்பந்தமான வேலைகளும்
புத்தகங்களும், வியாபார சம்பந்தமான சகல வேலைகளும்
கணக்குப்புத்தகங்கள், வட்டிச்சிட்டைப் பாரங்கள், லெட்
டர்ப்பாரங்கள், இலக்கணப்பிழைகளில்லாமல் திருத்த
மாயும், பார்டர்களாலும், படங்களாலும், எவர்
மனதையும் கிரகிக்கும்படி அலங்கரித்து
சீக்கிரமாகவும், சார்சுசகாயமாகவும்
செய்து கொடுக்கலாகும்.

**புஸ்தகங்கள் அழகாக அச்சிட ராயல் பிரிண்டிங்மிஷின்
வரவழைத்திருக்கிறோம்.**

ரூலிங்மிஷின், நம்பரிங்மிஷின், பர்ப்பரேஷன்மிஷின், கட்டிங்மிஷின்
முதலிய இயந்திரங்கள் எங்களிடமிருப்பதால் குறிப்பு, பேரேடு,
கையெழுத்துப்புத்தகம், ரசீது, உண்டியல், பட்டியல், லெட்டர்
பாட், வட்டிச்சிட்டை முதலிய சகல பைண்டுவேலைகளும்
தனித்தனிஆர்டர்களுக்கு ரூல், கட்டிங், பர்ப்பரேஷன்
நம்பர் முதலிய வேலைகளும் குறைந்தசார்சுக்குத்
தயார்செய்து கொடுக்கலாகும்.

இங்ஙனம்,

தேவாரபாராயணம்

**அ. முத்துச்சாமிப் பிள்ளை,**

மானேஜிங் புரப்ரைட்டர்.